**MCOP.No. 357/2025**
**ம.சா.1 : அருண்பாபு**
**தேதி : 22.07.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எனது பிறந்ததேதி 25.04.2001. எனக்கு தற்போது 25 வயது என்றால் சரி. 2ம் மனுதாரர் பிரேம்குமாரின் பிறந்த தேதி என்ன என்றால் 22.07.2004. 2ம் மனுதாரர் பிரேம்குமாருக்கு தற்போது 22 வயதிருக்கும் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன சந்திரசேகருக்கு 32 வயதிருக்கும் என்றால் சரிதான். எனது தந்தை பெயர் லோகநாதன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் மற்ற நபர்கள் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன எனது அம்மாவின் பிரேதத்தையும், சந்திரசேகர் பிரேதத்தையும் குமாரமங்கலம் அரசு மருத்துவமனையில் பார்த்தேன் என்றால் சரிதான். 2ம் மனுதாரர் பிரேம்குமாரின் தந்தை பெயர் நாகராஜ் என்றால் சரி. எனது தந்தை கடந்த 10.02.2000 ஆம் தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2ம் மனுதாரரின் தந்தை நாகராஜ் தற்போது உயிருடன் உள்ளார் என்றால் சரிதான்.2ம் மனுதாரரின் தந்தை நாகராஜுடன் எனது தாயாருக்கு நடந்த திருமணம் நீதிமன்றம்

மூலம் முறையாக ரத்து செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதற்குரிய ஆவணங்கள் எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரி. மேற்படி நாகராஜ்–க்கும், எனது தாயார் விஜயலட்சுமிக்கும் நடைபெற்ற திருமணத்தை சட்டப்படி ரத்து செய்யாததால் விஜயலட்சுமிக்கும் இறந்து போன சந்திரசேகருக்கும் இடையே நடந்ததாக சொல்லப்படும் திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நானும் 2ம் மனுதாரரர் பிரேம்குமாரும் இறந்துபோன சந்திரசேகரின் தத்துப்பிள்ளை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நானும் 2ம் மனுதாரரர் பிரேம்குமாரும், எனது தாயாரும் இறந்துபோன சந்திரசேகரின் வாரிசுகள் மற்றும் சார்ந்து வாழ்பவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் இறந்துபோன சந்திரசேகருக்கும் எந்தவிதமான உறவுமுறையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான், எனது தாயார், இறந்துபோன சந்திரசேகர் ஆகியோர் கோயமுத்தூரில் ஒன்றாக வாழந்து வந்ததற்கு ஆதரவாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரி. நானும், 2ம் மனுதாரரும் இறந்துபோன சந்திரசேகருக்கு சுவீகார

மகன்கள் அல்ல என்றும் இழப்பீடு பெறுவதற்காக வேண்டுமென்றே பொய்யாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன சந்திரசேகரின் வருமானத்தை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரி. இறந்துபோன சந்திரசேகர் ஸ்ரீஹரி பைனான்ஸில் என்ற நிறுவனத்தில் வேலை செய்து மாதம் ரூ.30000/- வருமானம் ஈட்டி வந்தார் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரி. இறந்துபோன சந்திரசேகர் ஸ்ரீஹரி பைனான்ஸில் என்ற நிறுவனத்தில் வேலை செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நான், 2 ம் மனுதாரர் இறந்துபோன சந்திரசேகரை வாரிசுகளோ அல்லது சார்ந்து வாழ்பவர்கள் அல்ல என்பதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. விபத்து இறந்துபோன சந்திரசேகரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும் அதனால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் முழுமையாக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.11 ஆவணமானது MCOP.378/2022 வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால்

சரிதான். ம.சா.ஆ.11 ஆவணமானது வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.11 ஆவணமானது சட்டப்படி செல்லத்தக்க ஆவணமல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு விபத்தானது இறந்துபோன சந்திரசேகரின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/—S.சுமதி.,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.